# புறநானூற்றில் உடலியல் சார்ந்த மருத்துவ முறைகள்

*முனைவர் ஞா. ஜோசப் அருண்குமார்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெக்காலிப்பட்டி, தென்காசி மாவட்டம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6448

***முன்னுரை***

*மருந்துகளைப் பற்றிஆராயும் துறைக்கு “மருந்தியல்” என்று பெயர். நோயாளிகளுக்குத் தேவையான எல்லா விதமான மருந்துப் பொருட்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் துறையே மருந்து துறையாகும். நோயாளிக்கு தேவையான நேரத்தில் தேவையான மருந்துகளைக் கொடுத்து அவர்களின் உடல் நலம் பேணுவது ஒரு மருத்துவரின் தலையாயக் கடமையாக இருந்துள்ளன. ஆனால் பெரும்பாலும் இன்றையகாலக்கட்டங்களில் இதுபோன்றநிகழ்வுகளும்,குறைந்து கொண்டே வருகிறது எனலாம். காரணம் என்னவென்றால் எங்குப் பார்த்தாலும் பணத்தின் மீதான ஆசை மருத்துவர்களுக்கு இருப்பதினால் நோயாளிக்கு சரியான சிகிச்சைகள் கிடைப்பதில்லை. இதனால் பல உயிர்கள் தினந்தோறும் மடிந்துக் கொண்டே இருக்கிறது. நோயாளிக்கு ஏற்படும் நோய்களைப் பற்றி குறிப்பால் அறிவது ஒரு மருத்துவரின் கடமையாகும். அன்றைய காலத்தில் இது சிறப்பாகவே நடைபெற்றது. இன்றைய காலத்தில் மிகவும் குறைந்து கொண்டே வருகிறது எனலாம். மேலும் அக்காலத்தில் மருத்துவர், மருத்துவச்சி, மருந்து, மருத்துவப் பணியாளர் போன்ற மருந்தியல் தொடர்பான பணியில் அன்றே இருந்துள்ளனர். பழங்காலத்தில் மருத்துவரை அறவோன் என்றும், ஆயுள்வேதர் என்றும் அழைக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக தொல்காப்பியர் காலத்திலேயே மருத்துவர் பற்றிய செய்திகளை செய்யுளியலின் மூலம் 1447 வது நூற்பா “நோய் மருங்கு அறிநரும்” என்று மருத்துவரைப் பற்றி குறிப்பிடுகின்றனர். வினையைத் தீர்க்கும் உணவாக மருந்தைப் பயன்படுத்துவதால் நோயைக் குணமாக்கும் மருந்துகளை ஔடதம், அமிழ்தம் என்று பெயரிட்டு அழைத்தனர். சங்க இலக்கியங்களில் மருத்துவம் தொடர்பான செய்திகள் அதிகமாக பதிவாகியுள்ளது. இங்கு புறநானூற்றில் மட்டும் மருத்துவம் தொடர்பான சிறப்புகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குழந்தை மருத்துவ முறைகள்**

சங்ககாலத்திலேயே நோய் தடுக்கும் முறைகளை முன்னோர்கள் கடைப்பிடித்து அதன் படி பின்பற்றி வந்துள்ளனர் என்பதற்கு சங்கப் பாடல்களே சான்றாக அமைகிறது. குழந்தைகள் குமரப் பருவத்தில் இருக்கும் போது நோய்கள் தாக்காமல் இருக்க வேம்பு இலை, வெண் சிறுகடுகு உள்ளிட்டவற்றை உடம்பில் புசுவதுண்டு.

மேலும் சிறுவர்கள் தலைமுடியில் வேம்பின் எண்ணெய், தயிர், சந்தனம் உள்ளிட்டவை புசும் மருத்துவ முறைகள் இன்றளவும் வழக்கில் உள்ளது. இதனால் குழந்தையின் உடல் குளிர்ச்சி அடையும் மற்றும் வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படாமலும் தடுக்கலாம். இம்முறையால் தலையில் குளிர்ச்சி ஏற்படக்கூடும் என்ற மருத்துவ உண்மை அன்றே இருந்துள்ளது. என்பதனை,

**"குடுமிகளைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்**
**நெடுங்கொடி உழிஞைப் பவரொடுமிலைந்து"**

***(புறம் - 77 : 2 - 3)***

என்ற பாடல் வரிகளும் சான்றாகிள்ளது. குடுமியை நீக்கிய உச்சிதலையில் வேம்பின் தளிரையும், உழிஞைக் கொடியையும் குளிர்ச்சிக்காக தலையில் சூடிக்கொண்டார்கள் என்ற உண்மை கருத்துகளும் இப்பாடல் மூலம் தெரிகிறது.

### எண்ணெய் தேய்க்கும் மருத்துவ முறைகள்

அக்காலம் முதல் இக்காலம் வரை எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கம் வழக்கத்தில் இருந்துக் கொண்டே வருகிறது. இதில் ஆண், பெண் என்ற இருவருமே இதனைக் கடைப்பிடித்தார்கள். ஆண் என்பவன் புதன் மற்றும் சனிக்கிழமைகளிலும், பெண் என்பவள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் எண்ணெய் தேய்த்து குளித்தால் உடலுக்கு பல நன்மைகளைத் தரும் என்பது முன்னோர்களின் கருத்தாகும். இதனை இன்றளவும் கிராமப்புறங்களில் பின்பற்றிக் கொண்டே வருகிறார்கள். குறிப்பாக சொன்னால் விழாக்காலங்களில் தான் அதாவது பொங்கல், தீபாவளி, கார்த்திகை, ஊர் திருவிழாக்கள் இது போன்ற இன்னும் ஏராளமான நிகழ்வுகளில் இவர்கள் உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்து குளிக்கும் பழக்கங்களைநம் கண்கூடாகப் பார்க்க முடியும். இதனை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை தொன்றுதொட்டே கடைப்பிடிக்கிறார்கள். இது உடலுக்குத் தேவையான குளிர்ச்சியையும் தருகிறது. மேலும் கண் எரிச்சலை தடுக்கும், உடல் சூட்டை தணிக்கும், வயிற்று வலியை நீக்கும், கூந்தல் நிறம் மாறாமல் காக்கும். இது போன்ற பல நன்மைகளை தருவதால் சங்ககால மக்களும் எண்ணெய் தேய்க்கும் முறைகளைக் கடைபிடித்தார்கள். பண்டைய காலங்களில் ஆயர் குலத்தினர் தலையில் வெண்ணெய், நெய் தடவிக் கொள்ளுதலை இயல்பாகக் கொண்டனர் என்பதற்கு சங்கப்பாடல்களே சான்றாக அமைகிறது. இதனையே,

**"பாறுமயிர்க் குடுமிஎண்ணெய் நீவி"**

***(புறம் - 279 : 9)***

என்ற பாடல் வரி மூலம் இது போன்ற உண்மை நிகழ்வுகளை அறிய முடிகிறது. இதில் குளிர்ச்சி பெற தலைவியின் தலை உச்சியிலும், கூந்தலிலும், தகரம், மயிர்ச்சாந்து உள்ளிட்ட வாசனைப் பொருட்களையும் அணிந்தார்கள். இவைகள் உடம்பில் ஏற்படும் துர்நாற்றத்தை போக்கவும் உதவியது. இது ஓர் உடல்சார் மருத்துவ சிகிச்சை முறையாகும்.

### கருகலைப்பு மருத்துவ முறைகள்

அன்றைய காலங்களில் ஆண், பெண் என்று வேறுபாடு பார்க்காமல் அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்த்தார்கள். ஆனால் அதற்கு மாறாக இன்றைய காலங்களில் குழந்தை கருவில் இருக்கும் போதே அது ஆண் குழந்தையா? ஆல்லது பெண் குழந்தையா? என்று பார்க்கும் அறிவியல் வசதிகளும் அதிகமாக உள்ளதால், கருவிலேயே குழந்தை கலைக்கும் மருத்துவ முறைகளும் தொடர்ந்துக் கொண்டே வருகிறது. இதில் குறிப்பாக பெண் குழந்தை என்றாலே கருவைச் சிதைக்கும் மரபு இன்றளவும் இருந்துக் கொண்டு வருகிறது. இது போன்றே பிரச்சினைகளை ஒழிக்க இன்று சட்டங்கள் பலபோட்டாலும், திட்டங்கள் சிலபோட்டுக் கொண்டே கருக்கலைப்பு முறைகள் நடந்துக் கொண்டே

இருக்கிறது. சங்க இலக்கியத்தில் பெண்களின் கருப்பத்தை அழிக்கும் முறை ஒரே பாடலில் தான் பதிவாகின்றது. இம்முறையினையே,

**"மாண்இழைமகளிர் கருச் சிதைத்தோர்க்கும்"**

***(புறம் - 34:2)***

என்றபாடல் வரி மூலம் பெண்களின் கருவைச் சிதைப்பவராக மருத்துவர், மருத்துவச்சி போன்றவர்கள் இருந்துள்ளனர் என்ற செய்திகளையும் சங்க இலக்கியப் பாடல் வரிகளும் குறிப்பிட்டுள்ளன. அவர்கள் எந்த குழந்தையைக் கருக்கலைப்பர் என்ற செய்திகள் பதிவு செய்யப்படவில்லை.

### குறைப் பிரசவம் பற்றிய மருத்துவ முறைகள்

பெண்களுக்கு குறைப் பிரசவம் என்பது அக்காலத்தில் இல்லை. இக்காலத்தில் மட்டுமே நடைபெறுகிறது எனலாம். பெண்ணுக்கு கருத்தரித்து சுமார் 28 வாரங்களில் குழந்தை வெளிபாட்டின் அறிகுறி தனித்து இயங்கும். பிறப்பு நாட்கள் குறைவான அளவு இருக்கும் முன்னரே தோன்றினால் அவற்றின் வடிவம் முழுமை பெறாது. இத்தகைய நிலையில் பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் எடை குறைந்த அளவு கொண்டே இருக்கும். பொதுவாக குழந்தையின் முழு வளர்ச்சி சுமார் 2500 கிராம் எடை கொண்டதாக இருக்க வேண்டும். இக்குறைப் பிரசவம் பற்றி சங்கப் பாடல்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டுள்ளனர். இதனை,

**"சிறப்புஇல் சிதடும் உறுப்பு இல்பிண்டமும்**
**கூனும், குறளும், ஊமும், செவிடும்,**
**மாவும் மருளும், உளப்படவாழ்நர்க்கு**
**எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்"**

***(புறம் - 28 : 1 - 4)***

என்ற பாடலடியின் மூலம் "ஊன்தடி" என்றசொல் குறைப்பிரசவ நிலையை எடுத்துரைக்கின்றது. மேற்காட்டிய பாடல்கள் மூலம் குறைமாதப் பிரசவமாகிய ஆண், பெண் என்ற இருவரையும் தற்காலத்தில் மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்கிறோம்.

### பஞ்சு மருத்துவ முறைகள்

பழந்தமிழர்கள் போர்களத்தில் விழுப்புண் ஏற்பட்டால் கட்டுப்போட பஞ்சினைப் பயன்படுத்துவர் என்ற செய்திகளைச் சங்ககால நூல்களும் எடுத்துரைக்கிறது. முன்பு நெய்த்துணியால் புண்ணிற்குப் பஞ்சு வைத்துக் கட்டுவது மரபாகும். பாதங்களில் புண் ஏற்பட்டால் கூட செம்பஞ்சுக் குழம்பைப் பஞ்சில் நனைத்துக் கட்டுவர். இதே போலஆடவர் போரில் விழுப்புண் பட்டுகாயம் ஏற்பட்டால் அதனைப் பஞ்சு வைத்துக் கட்டும் முறையினை,

**"சென்றோன் மன்ற,சொசென் றெறி**
**வெம்புண் ணறிநர் கண்டுகண் அலைப்ப"**

***(புறம் - 373 : 22 -23)***

என்றும்,

**"கதுவாய் போகியதுதிவாய் எஃகமொடு**
**பஞ்சியும் களையாப் புண்ணர்"**

***(புறம் : 353 : 15 - 16)***

என்ற பாடலடிகள் சான்று பகர்கிறது. இதன் வழி போர் சிகிச்சைக்குரிய மருத்துவ முறைகளுள் பஞ்சு வைத்துக் கட்டும் நுட்பத்தை அறியமுடிகிறது.

### ஒட்டு மருத்துவ முறைகள்

தொன்றுதொட்டுப் போர் முறையில் வாள், ஈட்டி, வேல், கத்தி போன்ற படைக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம். இரும்பு மூலம் ஏற்படும் உலோகங்களான இவற்றில் விழுப்புண் ஏற்பட்டால் அது நஞ்சாக மாறிவிடும். துருப்பிடித்த இரும்புக் கருவிகள் அனைத்தும் உயிருக்கு பெரும் ஆபத்தான ஒன்றாகும் என்று மருத்துவம் மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும். எதிர்பாராத விதமாக இதன் மூலம் காயங்கள் ஏற்பட்டால் உடனே இக்காலத்தில் தடுப்புசிகளும் போடப்படுகிறது. மேலும் அக்காலத்தில் இது போன்ற வசதிகளும் இல்லை, உலோகத்தால் ஏற்படும் காயங்களுக்கு மருந்தாக அத்தி மரப்பாலினைக் காயங்களுக்கு இட்டு குணப்படுத்தி வந்தனர்

என்ற செய்திகளும் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளது. இதனையே,

**"இரும்புசுவைக் கொண்டவிழுப்புண் நோய்தீர்ந்து**
**மருந்துகொள் மரத்தின் வாள்விடுமயங்கி,**
**வடுஇன்றுவடிந்தயாக்கையன்,கொடைஎதிர்ந்து"**
***(புறம் -180:4 - 6)***

என்ற பாடல் வழி மூலம் இது போன்ற செய்திகளை உணரலாம். இதில் உலோக நஞ்சினை நீக்கும் ஒட்டு மரத்துவமுறை அறியமுடிகிறது. தற்காலத்தில் உலோக விஷத்தை நீக்க நவீன மருத்துவ முறையில் டி.டி தடுப்புசியும் போடப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் (Tentaus Toxide) என்று அழைக்கப்படுகிறது.

## முடிவுரை

பழந்தமிழர்கள் சிறந்த மருத்துவ வல்லுநர்களாக திகழ்ந்தார்கள் என்பதற்கு சான்றாக சங்ககாலப் பபாடல்களே அமைகின்றன. போரில் விழுப்புண் அடைந்தவர்களுக்குப் பணிவிடை செய்ய பெண்களே முன்வந்தார்கள். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் போன்ற இவர்களை போருக்கு அனுமதிக்கவில்லை. மேலும் குழந்தை பெற்ற பெண்களுக்கு வேம்பு, கடுகு போன்ற நறுமணப் பொருட்கள் நோய் தீர்க்க உதவியுள்ளன. விழுப்புண் உற்றோர்க்கு அறுவை சிகிச்சைகள் அனைத்தும் இன்றளவு அறிவியல் முறைப்படி நடக்கிறது எனலாம். இன்றைய நவீன காலத்தில் கருவளர்ச்சி உற்றகாலம் முதல் குழந்தை வளரும் காலம் வரை அனைத்து தாய்மார்களும் தங்கள் குழந்தைகளின் மேல் முழுகவனம் செலுத்த வேண்டும் என்பது அறிவியலின் கருத்தாக இக்கட்டுரையில் பதிவாகியுள்ளது.

## துணைநூற் பட்டியல்

1. உ.வே.சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரையும், முதல் பதிப்பு, 2014, உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.
2. புலியூர்க் கேசிகன், தொல்காப்பியம், முதல் பதிப்பு, சாராதா பதிப்பகம், சென்னை.